ஶ்ரீமதே இராமாநுஜாய நம:

# பெரியாழ்வார் திருமொழி 4-8
## மாதவத்தோன்
(திருவரங்கம் பெரிய கோயிலின் பெருமை 1)

402 * மாதவத்தோன் புத்திரன் போய் * மறிகடல் வாய் மாண்டானை *
ஓதுவித்ததக்கணையா * உருவுருவே கொடுத்தானூர் **
தோதவத்தித் தூய்மறையோர் * துறைபடியத் துளும்பி எங்கும் *
போதில் வைத்த தேன் சொரியும் * புனலரங்கம் என்பதுவே (1)

403 பிறப்பகத்தே மாண்டொழிந்த * பிள்ளைகளை நால்வரையும் *
இறைப்பொழுதில் கொணர்ந்து கொடுத்து * ஒருப்படித்த
உறைப்பனூர் **
மறைப் பெருந்தீ வளர்த்திருப்பார் * வருவிருந்தை
அளித்திருப்பார் *
சிறப்புடைய மறையவர் வாழ் * திருவரங்கம் என்பதுவே (2)

404 மருமகன் தன் சந்ததியை * உயிர்மீட்டு மைத்துனன்மார் *
உருமகத்தே வீழாமே * குருமுகமாய்க் காத்தானூர் **
திருமுகமாய்ச் செங்கமலம் * திருநிறமாய்க் கருங்குவளை *
பொருமுகமாய் நின்றலரும் * புனல் அரங்கம் என்பதுவே (3)

405 கூந்தொழுத்தை சிதகுரைப்பக் * கொடியவள் வாய்க் கடிய
சொல் கேட்டு *
ஈன்றெடுத்த தாயரையும் * இராச்சியமும் ஆங்கொழிய **
கான் தொடுத்த நெறி போகிக் * கண்டகரைக் களைந்தானூர் *
தேன் தொடுத்த மலர்ச் சோலைத் * திருவரங்கம் என்பதுவே (4)

406 பெருவரங்கள் அவை பற்றிப் * பிழக்குடைய இராவணனை *
உருவரங்கப் பொருதழித்து * இவ்வுலகினைக் கண்
பெறுத்தானூர் **
குருவரும்பக் கோங்கலரக் * குயில் கூவும் குளிர் பொழில் சூழ் *
திருவரங்கம் என்பதுவே * என் திருமால் சேர்விடமே (5)

407 கீழுலகில் அசுரர்களைக் * கிழங்கிருந்து கிளராமே *
ஆழி விடுத்து அவருடைய * கருவழித்த வழிப்பனூர் **
தாழை மடலூடுரிஞ்சித் * தவள வண்ணப் பொடி அணிந்து *
யாழினிசை வண்டினங்கள் * ஆளம் வைக்கும் அரங்கமே (6)

408 கொழுப்புடைய செழுங்குருதி * கொழித்திழிந்து குமிழ்த்தெறிய *

பிழக்குடைய அசுரர்களைப் * பிணம் படுத்த பெருமானூர் **
தழுப்பரிய சந்தனங்கள் * தடவரை வாய் ஈர்த்துக் கொண்டு *
தெழிப்புடைய காவிரி வந்து * அடி தொழும் சீரரங்கமே (7)

409 வல்லெயிற்றுக் கேழலுமாய் * வாளெயிற்றுச் சீயமுமாய் *
எல்லையில்லாத் தரணியையும் * அவுணனையும் இடந்தானூர் **
எல்லியம்போது இருஞ்சிறை வண்டு * எம்பெருமான் குணம்
பாடி *
மல்லிகை வெண் சங்கூதும் * மதிள் அரங்கம் என்பதுவே (8)

410 குன்றாடு கொழுமுகில் போல் * குவளைகள் போல் குரைகடல்
போல் *
நின்றாடு கணமயில் போல் * நிறமுடைய நெடுமாலூர் **
குன்றாடு பொழில் நுழைந்து * கொடியிடையார் முலையணவி *
மன்றூடு தென்றலுமாம் * மதிள் அரங்கம் என்பதுவே (9)

411 * பருவரங்கள் அவை பற்றிப் * படையாலித்தெழுந்தானை *
செருவரங்கப் பொருதழித்த * திருவாளன் திருப்பதி மேல் **
திருவரங்கத் தமிழ் மாலை * விட்டுசித்தன் விரித்தன கொண்டு *
இருவரங்கம் எரித்தானை * ஏத்த வல்லார் அடியோமே (10)